கல்குடா கல்வி வலய வளநிலைப் பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை க.பொ.த. (உ/த) – 2018 யூலை

தரம் - 12(2019)	தவணை – 3	பரத நாட்டியம் -I	நேரம் : 1மணி

சுட்டெண்/ பெயர் :

பகுதி – I

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. நாடகப் பண்பு கொண்ட சாஸ்திரிய நடனமாக அமைவது
   1. பரதம் 2. ஒடிசி 3. கதக்
   4. கதகளி 5. மணிப்புரி

2. இலைத்தாளம் எனும் இசைக்கருவி பயன்படுத்தும் நடன மரபு
   1. மோகினி ஆட்டம் 2. கதக் 3. கண்டிய
   4. பரதம் 5. யாவும் சரி

3. ஸ்ரீ கிருஷ்ண ஜல கீரிட எனும் நடன நாடகத்தை எழுதியவர்
   1. அருணாசலக்கவிராயர் 2. கோபாலகிருஷ்ண பாரதி
   3. கோபாலகிருஷ்ண சரஸ்வதி 4. ருக்மணி அருண்டேல்
   5. வீரமணி ஐயர்

4. நாடகத்தில் பயன்படுத்தப்படும் " ஆர்ய பாஷை" என்பது
   1. பாரமரினின் மொழி 2. உயர்குடியினரின் மொழி
   3. விண்ணகத்தோரின் மொழி 4. விலங்குகள் மற்றும் பறவைகளின் மொழி
   5. யாவும் சரி

5. வைவர்ணய என்பது
   1. நடுங்குதல் 2. வியர்த்தல் 3. கண்ணீர் சொரிதல்
   4. புல்லரித்தல் 5. நிறமாற்றம்

6. விரல்களை சத்தமின்றி எண்ணுதல்
   1. நிஷ்கிராமம் 2. விட்சேபம் 3. பிரவேஷம்
   4. விசர்ணித 5. ஆலாபம்

7. நாட்டிய சாஸ்திரம் எனும் நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட ஆண்டு
   1. 2001 2. 2002 3. 2004 4. 2008 5. 2018

8. நீர் கற்ற கணபதி கௌத்துவத்தை இயற்றியவர்
   1. வீரமணி ஐயர் 2. கோபால கிருஷ்ண பாரதி
   3. கங்கை முத்து நட்டுவானர் 4. கே. லக்ஷ்மணன்
   5. சுப்பராயர்

9. 72 மேளகர்த்தா அமைப்பை பற்றி கூறியவர்
   1. துளஜா மகராஜா 2. ருக்மணிதேவி அருண்டேல் 3. வேங்கடமகி
   4. முத்துத் தாண்டவர் 5. தியாகராஜ சுவாமிகள்

10. 10 வது மேளகர்த்தா இராகம்
    1. நாடகப்ரிய 2. வனஸ்பதி 3. தானரூபினி
    4. ரூபவதி 5. ரத்னாங்கி

11. நாட்டிய சாஸ்திரத்தில் நாட்டிய அரங்கு பற்றிக் கூறும் அத்தியாயம்
    1. 6ம் அத்தியாயம் 2. 5ம் அத்தியாயம் 3. 2ம் அத்தியாயம்
    4. 4ம் அத்தியாயம் 5. 8ம் அத்தியாயம்

www.kedu.lk

12. "பிரகர்ஜிமகராஜ் ஓர் பிரபல நடனக் கலைஞராவார்" இவர் எந்த சாஸ்திரிய நடனத்தில் புகழ் பெற்றவர்
1. மணிப்புரி 2. ஓடிசி 3. கதகளி
4. கதக் 5. பரதநாட்டியம்

13. பந்தனண நல்லூர் சபாரஞ்சிதம் அவர்களின் அரங்கேற்றம் இடம்பெற்ற ஆண்டு
1. 1925 2. 1926 3. 1935 4. 1924 5. 1923

14. "பிராணி மித்ரா" எனும் பட்டத்தினைப் பெற்ற நடனக் கலைஞர்
1. தஞ்சாவூர் சுப்பராய நட்டுவானர் 2. மயிலாப்பூர் கொரியம்மா
3. பால சரஸ்வதி அம்மா 4. ருக்மணிதேவி அருண்டேல்
5. அருணாசல நட்டுவனார்

15. மயிலாப்பூர் கௌரி அம்மா அவர்கள் இறைபதம் அடைந்த ஆண்டு
1. 1974 2. 1971 3. 1970 4. 1980 5. 1871

16. முருகன் சூரனை வென்று உடுக்கடித்தவாறு ஆடியது
1. துடிக் கூத்து 2. சூபடிக் கூத்து 3. பாவைக் கூத்து
4. குடக் கூத்து 5. குடைக் கூத்து

17. முல்லை நில மக்கள் திருமால் தங்களைக் காக்க வேண்டி ஆடியது
1. ஆச்சிரியர் குரவை 2. குன்றக் குரவை 3. சாக்கையர் கூத்து
4. வரிக்கூத்து 5. பேடிக் கூத்து

18. அசோக வனத்தில் சீதை சிறையிருந்த போது அவள் எவ்வகை நாயகி
1. ஸ்வர்தீனபதிகா 2. விரஹோத்கண்டிதா 3. அபிசாரிகா
4. விப்ரலதா 5. கலகாந்தரிகா

19. கொஹொம்ப கங்காரிவினை தழுவி வந்த சம்பிரதாய நடனம்
1. உடநட்ட 2. பஹத்தட்ட 3. சபரகழுவ
4. நையாண்டி 5. உடக்கி

20. பரத நாட்டியம் எந்த பாரம்பரிய அடிப்படையில் நாட்டிய வடிவம் பெற்றது
1. தெருக்கூத்து 2. துள்ளல், தோட்டம் 3. கூடியாட்டம், யசஷிகானம்
4. பாகவதமேளம் 5. குச்சுப்பிடி

21. சிருங்கார ரஸத்தின் ஆலம்பன விபாவம்
1. காதலன், காதலி 2. அழகிய பூந்தோட்டம் 3. புல்லாங்குழல் இசை
4. காதலன் தோழி 5. சந்தன நறுமணம்

22. அபஹஸித்தம் என்பது
1. சிரிப்பு 2. இளநகை 3. புன்முறுவல்
4. கண்ணீருடன் கூடிய சிரிப்பு 5. அட்டகாசமான சிரிப்பு

23. சங்கமருவிய காலத்தில் நடனம் ஆடியதாக கூறப்படும் பெண்கள்
1. கணிகையர் 2. கோடியர் 3. உத்தியர்
4. வயரியர் 5. பொருநர்

24. நாயக நாயகி பாவத்தின் உட்கருத்துக்களை நுணுக்கமாகவும், தெளிவாகவும் வெளிக்காட்ட வாய்ப்புக்களை கொண்டுள்ள மதுர பக்தியை அதிகமாக உள்ளடக்கிய உருப்படி
1. ஜாவளி 2. பதம் 3. தில்லானா
4. அஷ்டபதி 5. ஜதிஸ்வரம்

25. உலக நடன தினமாகக் கொண்டாடப்படும் தினம்
1. தை 1ம் திகதி 2. ஆவணி 15ம் திகதி 3. மாசி 4ம் திகதி
4. ஆடி 24ம் திகதி 5. சித்திரை 29ம் திகதி

(25 x 2 = 50 புள்ளிகள்)

www.ikeou.lk

கல்குடா கல்வி வலய வளநிலைப் பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை க.பொ.த. (உ/த) – 2018 யூலை

தரம் - 12(2019)	**தவணை – 3**	**பரத நாட்டியம் -II**	**நேரம் : 2மணி**

சுட்டெண்/ பெயர் :

பகுதி – II

முதலாம் வினாவிற்கும் ஏனைய மூன்று வினாக்களுக்கும் மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக

1) i. நீர் கற்ற வர்ணத்தின் தாளம், ராகம், பாடியவர் நாட்டிய அமைப்பு என்பவற்றை எழுதுக? (5 புள்ளி)

ii. வர்ணத்தின் திரிகால ஜதியினை தாளக் குறியீட்டுடன் எழுதுக? (10 புள்ளி)

iii. வர்ணத்தின் பல்லவி வரியை தாள அங்க அடையாளங்களுடன் எழுதுக? (5 புள்ளி)

2) ஒடிசி நடனத்தினை பின்வரும் அடிப்படையில் ஆராய்க? தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, பக்கவாத்தியம், ஆடை, ஆபரணம், ஒப்பனை

(10 புள்ளிகள்)

3) பின்வரும் சொற்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக?

i. நாட்டிய சாஸ்திரம்

ii. ஸ்தாயி பாவம்

iii. முக ஒப்பனை

iv. பதினொரு வகை ஆடல்

(10 புள்ளிகள்)

4) இரஸச் கோட்பாட்டினை முழுமையாக விபரித்து எழுதுக?

(10 புள்ளிகள்)

5) சைவமும் வைணவமும் மேலோங்கி "இது ஒரு பக்தி நெறிக் காலம்" என புகழப்பட்ட காலகட்டத்தினை ஆராய்ந்து விபரிக்க?

(10 புள்ளிகள்)

6) மதுராந்தகம் ஜகதாம்பாள் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு பற்றியும் விபரித்து எழுதுக?

(10 புள்ளிகள்)

www.ikedu.lk